**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

8075230

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District மாவட்டம் : சேலம் PS காவல்நிலையம் : ஊ.த.க.பிரிவு Year ஆண்டு : 2021 FIR No முத.அ. எண் : 14/AC/2021 Date நாள் : 25.9.2021

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7 (a)
   (ii) Act சட்டம்: (Amendment) act 2018 Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from : நாள் முதல்
   Date to : நாள் வரை (1) 13.09.2021 at 11.30 hrs (2) 23.09.2021 at 13.00 hrs
   Time Period : நேர அளவு
   Time from : நேரம் முதல்
   Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 25.09.2021 Time நேரம் : 15.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 20 கி.மீ. தெற்கு
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி கிராம நிர்வாக அலுவலகம் ஏர்வாடி பெத்தாம்பட்டி கிராமம் சேலம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. செல்வகுமார்
   (b) Father's/ ~~Husband's~~ Name : தந்தை / கணவர் பெயர் சாமியப்பன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 43 years
   (d) Nationality : நாட்டினம் இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் விவசாயம்
   (g) Address : முகவரி கதவு எண்.102/6 கவுண்டமணிகாடு ஏர்வாடி பெத்தாம்பட்டி, ஏர்வாடி (PO) மேட்டூர் வட்டம் சேலம் மாவட்டம் -203

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திருமதி. விஜயலட்சுமி, கிராம நிர்வாக அலுவலர், ஏர்வாடி பெத்தாம்பட்டி கிராமம், சேலம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   புகார்தாரரால் தாமதம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ....................... Rank ....................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

S. Selvakumar 25.09.2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

(signature) 25.9.2021
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

25.09.2021 - 18.15 hrs.

Name: பெயர் R.D. Ravi Kumar
Rank: நிலை Inspector of Police ..................... No. எண் .........
VAC, Salem

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 14/AC/2021 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 பிரிவு 7 (a) ன் கீழ் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை படிவம் வரிசை எண் 12 ன் விபரம்.

__பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது__: சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆர்.டி.ரவிகுமார் ஆகிய நான் இன்று 25.09.2021 ந் தேதி 15.00 மணிக்கு அலுவலகத்தில் இருந்தபோது சேலம் மாவட்டம் –203, மல்லூர் வழி, ஏர்வாடி போஸ்ட், ஏர்வாடி பெத்தாம்பட்டி, கருவேப்பிலாங்காடு, கதவு எண் 102/6 சாமியப்பன் மகன் திரு.S.செல்வகுமார் என்பவர் சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி எழுத்து மூலமான புகார் ஒன்றினை கொடுத்தார். அப்புகாரின் விபரம் பின்வருமாறு. அனுப்புதல், S.செல்வகுமார், வயது 43, த.பெ. சாமியப்பன், 102/6 கருவேப்பிலாங்காடு, ஏர்வாடி பெத்தாம்பட்டி, ஏர்வாடி போஸ்ட், மல்லூர் வழி, சேலம் மாவட்டம்–203. பெறுதல் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சேலம். அய்யா, நான் சேலம் மாவட்டம், ஏர்வாடி பெத்தாம்பட்டி, கருவேப்பிலாங்காட்டில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். எனது மனைவி பெயர் பிரேமா, எங்களுக்கு ஜீவானந்தம், தேவ பிரசாத் என்ற இரண்டு மகன்கள் இருக்கிறார்கள். நான் எங்களுக்கு சொந்தமான ஏர்வாடி பெத்தாம்பட்டி வருவாய் கிராமத்தில் உள்ள சுமார் 2 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்து வருகிறேன். மேற்படி 2 ஏக்கர் நிலம் எங்களது பூர்வீக சொத்தாகும். எனது தாத்தா கந்த கவுண்டர் அவர்களுக்கு ஏர்வாடி பெத்தாம்பட்டி வருவாய் கிராமத்தில் சுமார் 7 ஏக்கர் நிலம் இருந்தது. அந்த 7 ஏக்கர் நிலமும், எனது தாத்தா இறந்த பிறகு ஒரே வாரிசான எனது அப்பா சாமியப்பன் பெயருக்கு பட்டா சிட்டா அடங்கல் ஆகியவைகள் மாற்றம் செய்யப்பட்டது. மேற்படி 7 ஏக்கர் நிலத்தில், சுமார் 2 ஏக்கர் நிலத்தை 2019 ஆம் ஆண்டு எனது அப்பா, எனது பெயருக்கு தான செட்டில்மென்ட் செய்துகொடுத்துவிட்டார். மீதமுள்ள சுமார் 5 ஏக்கர் நிலமும் எனது அப்பா பெயரிலேயே இருந்து வருகிறது. மேற்படி 5 ஏக்கர் நிலத்தில், 1 ஏக்கர் 11 1/2 சென்ட் நிலம் ஒரு பகுதியாகவும், 2.76 ஏக்கர் நிலம் ஒரு பகுதியாகவும் தனி தனியாக உள்ளது. மேற்படி தனியாக உள்ள 1 ஏக்கர் 11 1/2 சென்ட் நிலம் புல எண் 21 (3) ல் பட்டா எண் 75 ஆக உள்ளது. அதில் ஒரு கிணறும் உள்ளடக்கியது. இந்நிலையில் மேற்படி கிணற்றுக்கு என்னுடைய அப்பா பெயரில் இலவச மின் இணைப்பு பெறுவதற்காக ஒரு மாதத்திற்கு முன்பு மின்சார வாரியத்தை அனுகியபோது, மின் இணைப்பு பெறுவதற்கு மேற்படி நிலத்தின் பட்டா, சிட்டா, அடங்கல் ஆகியவைகள் விண்ணப்பதாரர் பெயரில் இருக்க வேண்டும் என்று தெரிவித்தார்கள். ஆனால் மேற்படி கிணறு பாகம் மட்டும் எனது அப்பா சாமியப்பன் பெயருக்கு மாற்றம் செய்யபடாமல், எனது

தாத்தா பெயரில் இருந்துவருகிறது. அதனால் மேற்படி கிணறு பாகத்தை என்னுடைய அப்பா சாமியப்பன் பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய முடிவு செய்து, 08.09.2021 ந் தேதி மல்லூரில் உள்ள ஒரு கணினி மையம் மூலம் பட்டா பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்திருந்தேன். விண்ணப்பித்து இரண்டு நாளுக்கு பின்னர் 11.09.2021 ந்தேதி ஏர்வாடி பெத்தாம்பட்டி கிராம உதவியாளர் திரு.உதயகுமார் அவர்கள் எனது வீட்டிற்கு வந்து கிணறு பாகம் பட்டா பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்ததில் உங்கள் தாத்தாவின் இறப்பு சான்று இல்லை, அதனை கிராம நிர்வாக அலுவலகத்திற்கு வந்து கொடுத்துவிடும்படி தெரிவித்தார். அதன்படி எனது தாத்தாவின் இறப்பு சான்றினை எடுத்து கொண்டு 13.09.2021 ந் தேதி காலை சுமார் 11.30 மணிக்கு நானும் எனது அப்பாவும் ஏர்வாடி பெத்தாம்பட்டி கிராம நிர்வாக அலுவலகத்திற்கு சென்று கிராம நிர்வாக அலுவலர் திருமதி.விஜயலட்சுமி அவர்களை நேரில் பார்த்து இறப்பு சான்றினை சமர்பித்தோம். அப்போது கிராம நிர்வாக அலுவலர் திருமதி.விஜயலட்சுமி அவர்கள், ரூபாய் 4,000/– கொடுத்துவிடுங்கள் மேற்படி பட்டா பெயர் மாற்றம் செய்யும் வேலையை விரைவில் முடித்து தருகிறேன் என்று தெரிவித்தார். தற்போது எங்களிடம் பணம் இல்லை என்று சொல்லி விட்டு நாங்கள் வீட்டிற்கு வந்துவிட்டோம். விண்ணப்பித்து இரண்டு வார காலமாகியும் பட்டா பெயர் மாற்றம் செய்யப்படாததால் நான் 23.09.2021 ந் தேதி மதியம் சுமார் 1.00 மணிக்கு ஏர்வாடி பெத்தாம்பட்டி கிராம நிர்வாக அலுவலகத்திற்கு சென்று, கிராம நிர்வாக அலுவலர் திருமதி.விஜயலட்சுமி அவர்களை நேரில் சந்தித்து பட்டா பெயர் மாற்றம் குறித்து விபரம் கேட்டேன். அதற்கு கிராம நிர்வாக அலுவலர் திருமதி.விஜயலட்சுமி அவர்கள், நான் உங்களிடம் ஏற்கனவே தெரிவித்ததுபோல் ரூபாய் 4,000/–ம் கொடுத்துவிடுங்கள், உடனே பட்டா பெயர் மாற்றிவிடலாம் என்றும் தெரிவித்தார். அதற்கு நான் அதிகமாக கேட்கிறீங்களே என்று கேட்டேன். அதற்கு அவர் சரி போயிட்டுபோது ரூபாய் 3,500/– கொடுத்து பட்டா வேலையை முடிச்சுகோங்க என்று தெரிவித்தார். மேலும், பணம் ரூபாய் 3,500/–எனக்கு கொடுத்தால்தான் உங்க வேலை முடியும் என்று கண்டிப்பாக சொல்லிவிட்டார். அதனால் நானும் அவரிடம் பணம் ஏற்பாடு செய்துவிட்டு உங்களை பார்கிறேன் என்று தெரிவித்துவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். அவர் கேட்டவாறு பணம் ரூ 3,500/– இன்றைக்குதான் என்னால் ரெடிபண்ண முடிந்தது. ஆனால் எனக்கும், எனது அப்பாவுக்கும் கிராம நிர்வாக அலுவலர் திருமதி.விஜயலட்சுமி அவர்களுக்கு ரூபாய் 3,500/– ம் கொடுத்து பட்டா பெயர் மாற்றம் செய்துக்கொள்ள விருப்பமில்லை. எனவே என்னிடம் லஞ்சமான ரூ 3,500/– கேட்ட ஏர்வாடி பெத்தாம்பட்டி கிராம நிர்வாக அலுவலர் திருமதி.விஜயலட்சுமி மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு Sd xxxx (S.செல்வகுமார்) 25.09.2021

Sir, Received the above computer typed report on 25.09.2021 at 15.00 Hrs. The genuineness of the informant was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused was also verified through sources and found to be not good. Hence, I registered a case in Salem Vigilance and Anti-Corruption Cr.No. 14/AC/2021 u/s 7 (a) of the Prevention of Corruption (Amendment) Act 2018 at 17.30 Hrs. today on 25.09.2021. Sd xxxx(R.D.Ravikumar) 25.09.2021, Inspector of Police, V&AC, Salem.

Original FIR along with Original computer typed report of Tr.S.Selvakumar S/o Samiappan, 102/6 Karuvepillankadu, Ervadi Bethampatti, Ervadi Post, Mallur Via, Salem District-203 is submitted to the Hon'ble Special Judge for Trail of cases under the Prevention of Corruption Act, Salem and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

25.9.21

(R.D.Ravikumar)
INSPECTOR OF POLICE,
V&AC, SALEM.